முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

நாள்: 04.03.2026 அ.வ.எண்.33/2013 பி.வா.சா.2 சுகுமார், த/பெ.மனோகரன்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) காலம் சென்ற ராஜம்மாளிடம் ராஜமாணிக்கம் வாடகைக்கு எடுத்த விவரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அவர் வாடகைக்கு குடியிருப்பது தெரியும் ஆனால் அவர்களுக்குள் என்ன தொடர்பு என்று எனக்கு தெரியாது. ராஜமாணிக்கம் தொடர்ந்து வாடகை செலுத்தி வந்த விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாடகைக்கு குடியிருந்தாலோ சட்டவிரோதமாக குடியிருந்தாலோ நீதிமன்றத்தின் மூலம் தான் வெளியேற்ற முடியும் என்றால் சரிதான்.

2) ராஜமாணிக்கத்தின் வாரிசுகளை வாதிகள் சட்டவிரோதமாக வெளியேற்ற முயற்சி செய்தார்களா என்றால் இல்லை. நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தால் ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் தாவா சொத்தை விட்டு வெளியேற வேண்டும் என்றால் ராஜம்மாளுக்கும் ராஜமாணிக்கத்திற்கும் உள்ள தொடர்பு பின்னிட்டு சாட்சி நீதிமன்றம் உத்தரவிட்டால் அதை மதித்து அவர்கள் வெளியேற வேண்டும் என்று கூறுகிறார். ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் குடியிருக்கும் வீட்டிற்கு அருகில் நான் வசித்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, ஆதார் மட்டும் தாக்கல் செய்துள்ளேன். நான் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் அதனால் என்னுடைய சாட்சியம் ஏற்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் தான் வீட்டின் மராமத்து பணிகள் செய்துவருகிறார்கள்

3)அவர்கள் என்ன மராமத்து பணிகள் செய்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் கிழக்குப் பார்த்து செந்தில்குமார் வீட்டிலும்

ஒப்பம்/-(R.சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

மோகன்குமார் வீட்டிலும் பாத்ரூம் கட்டிய விவரம் எனக்கு தெரியும் ஓட்டினை பிரித்து சரி செய்த விவரம் எனக்கு தெரியும். எத்தனைஆண்டுகளாக ராஜமாணிக்கம் மற்றும் அவரதுவாரிசுகள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சுமார் 25 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறார்கள், அடிப்படைத் தேவைக்காக அவர்கள் ஓட்டினைசரி செய்தார்கள் என்றால் சரிதான். மற்றவர்கள் சொத்தில் வாடகைக்கு குடியிருப்பவர்கள் உரிமையாளரின் அனுமதியின்றி பாத்ரூம் கட்டியது தவறு என்றால் 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு அனுமதி பெற்று தான் கட்டினார்கள்.

4) வழக்கு நிலுவையில் இருக்கும் போது அது போன்ற அனுமதி கொடுத்திருக்க மாட்டார்கள் என்றும் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ராஜம்மாள், வாதி மற்றும் ராஜமாணிக்கத்திற்கும் இடையே எத்தனை வழக்குகள் நடைபெறுகிறது என்றால் எனக்கு தெரியாது, அவர்களுக்கிடையே 6 வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் அனுமதி கொடுத்திருக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R.சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி.

பொள்ளாச்சி.